தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# ஓசோன் விழிப்புணர்வு 'வினாடி – வினா'

**கோவை, செப்.11–**

சர்வதேச ஓசோன் தினத்தை முன்னிட்டு, ஆன்லைன் வினாடி வினா போட்டிக்கு, இந்திய வன மரபியல் மற்றும் மரப் பெருக்கு நிறுவனம், ஏற்பாடு செய்துள்ளது.

ஆண்டுதோறும் செப்., 16ம் தேதி, சர்வதேச ஓசோன் தினம் கொண்டாடப்படுகிறது. ஓசோன் படலத்தின் முக்கியத்துவம், அதை பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன், இந்த தினத்தை, தன்னார்வ அமைப்புகள், அரசு நிறுவனங்கள் கொண்டாடுகின்றன.

இதையொட்டி, கோவை இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் என்விஸ் மையம் சார்பில், விழிப்புணர்வு ஆன்லைன் வினாடி வினா போட்டிக்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மட்டுமின்றி, பொதுமக்களும் இந்த போட்டியில் பங்கேற்கலாம். பங்கேற்கும் அனைவருக்கும், இ–சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

பங்கேற்க விரும்புவோர், https://bit.ly/3h2M1VK என்ற இணைய இணைப்பில் உள்நுழைய வேண்டும். போட்டியில் பங்கேற்பதற்கான கடைசி நாள், வரும் 15ம் தேதி என்று, அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

News in Dinamalar, 11.09.2020, An Awareness Quiz on Ozone